**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calender | : | | Miscellaneous | : | |
| Preliminary Register | : | | Case No. | : | **S.C.20/2022** |
| Sessions | : | | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 4** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | முருகேசன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **03.01.2026**

**1, 2 எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை:**

நான் விளாமுத்தூரில் குடியிருக்கிறேன். கொத்தனார் வேலைசெய்கிறேன். வழக்கில் இறந்துபோன பச்சையம்மாள் என்னுடைய பக்கத்து வயல்காரர் ஆவார். அவர் பேரன் கோகுலை எனக்கு தெரியும். 2ம் எதிரியை பார்த்துள்ளேன். சுமார் 3 1/2வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 6 மணியளவில் நான் பால்கரக்க சென்று என்வயலுக்கு அருகில் உள்ள பச்சையம்மாள் வீட்டிலிருந்து சத்தம்கேட்டு நான் போய் பார்த்தேன். நான் பார்க்கும்போது அவர் இறந்துகிடந்தார். அப்போது அவர் பேத்தி லட்சுமி இருந்தார். அவர் சத்தம்போட்டார், பொதுமக்கள் அங்கு வந்துவிட்டார்கள். அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

பச்சையம்மாள் எப்போதும் காலை 06.00 மணியளவில் அவர் வீட்டு முன்பு நின்றுகொண்டிருப்பதை நான் பார்ப்பேன் என்றும், கடந்த 20.09.2021ம் தேதி காலை 06.00 மணியளவில் அவர் அங்கு இல்லாததால் நான் தூங்கிகொண்டிருப்பார் என்று நினைத்துசென்றதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். இறந்துபோன பச்சையம்மாளுக்கு இறந்துபோன சங்கர், ஓட்டுநர் ராஜேந்திரன் மகன்கள் ஆவார். இறந்துபோன சங்கர் வீட்டில் பச்சையம்மாள் இருந்தார். இறந்துபோன சங்கர் மனைவி பெயர் தங்கம், அவர் மகன் தான் 1வது எதிரி கோகுல் என்றால் சரிதான். தங்கமும், கோகுலும் பச்சையம்மாளை வீட்டிலிருந்து காலி செய்யசொல்லி அடிக்கடி தகராறு செய்வார்கள் என்றால் சரிதான். அப்போது ஆதிலட்சுமி, அவர் கணவர் சண்முகம் வந்து சமாதானம் படுத்துவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு காலிசெய்ய சொல்லும்போது ரூ.1லட்சம் பணம் கொடுத்தால் காலிசெய்து விடுகிறேன் என்று பச்சையம்மாள் சொல்வார் என்றால் எனக்கு தெரியாது. அம்மாதிரி சண்டை நடக்கும்போது பச்சையம்மாளை 1வது எதிரி என்றைக்கு இருந்தாலும் உன்னை கொலைசெய்துவிடுவேன் என்று மிரட்டுவார் என்றால் சரிதான். எப்போதும் காலையில் ஆதிலட்சுமி தான் பச்சையம்மாளுக்கு டீ கொண்டு வந்து கொடுப்பார். வழக்கம்போல் 20ம் தேதியும் அவ்வாறு கொண்டுவந்து கொடுத்தார். அவ்வாறு டீ கொடுக்க போகும்போது ஆதிலட்சுமி சத்தம்போட்டதை பார்த்துதான் நான் போனேன் என்றால் சரிதான். நான்போகும்போது பச்சையம்மாள் மல்லாந்த நிலையில் கிடந்தார். அதன்பிறகு ஆதிலட்சுமி அவர் அப்பாவிற்கு போன் செய்துவரசொன்னார். 1வது எதிரியும், அவர் நண்பரான 2வது எதிரியும் சேர்ந்து பச்சையம்மாள் வாயில் துணியை வைத்து அமுக்கி கொலைசெய்துவிட்டதாக ஊரில் பேசிக்கொண்டார்கள். நான் மேற்கண்ட போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1, 2 எதிரிகள் பச்சையம்மாளை வாயில் துணியை அமுக்கி கொலைசெய்தார்கள் என்று நான் எந்த தேதியில் கேள்விபட்டேன் என்று எனக்கு தெரியாது. 1, 2 எதிரிகள் எந்ததேதியில் எங்கு வைத்து பச்சையம்மாளை கொலைசெய்ய போவதாக சொன்னார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. நான் கூலி வேலைசெய்கிறேன். நான் சாதரணமாக காலையில் சென்றுவிட்டு இரவு 07.00 மணியளவில் திரும்பி வருவேன். இறந்துபோன பச்சையம்மாளுக்கும் சங்கர் குடும்பத்திற்கும் இ டையே நடந்த பிரச்சனை சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.